**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – இரு கால்கள் பாதிக்கப்பட்டு கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தினை விரிவுப்படுத்தி ஒரு கால் பாதிக்கப்பட்டு, கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கும் 2023–2024–ஆம் நிதியாண்டு முதல் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டம் – கூடுதலாக நிதி ரூ.450.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை**

**அரசாணை (நிலை) எண். 17** | **நாள்: 04.07.2023,**
**சோபகிருது, ஆனி – 19,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054.**

**படிக்கப்பட்டது :**

1. அரசாணை (நிலை) எண்.30, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2.1)த் துறை, நாள் 14.03.2012.
2. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை, நாள் 04.05.2018.
3. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் ந.க. எண்.3210/உ.உ.பிரிவு/2023, நாள் 24.04.2023 மற்றும் 08.05.2023.

******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இருகால்கள் பாதிக்கப்பட்டு கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டம் 2011–2012–ஆம் நிதியாண்டு முதல் துவக்கப்பட்டு, நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2018–2019–ஆம் நிதியாண்டு முதல் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் சுமார் 52 நலத் திட்டங்கள் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்குள் செயல்படுத்திட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அதிகாரப் பகிர்வு (Delegation of Power) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையின் பத்தி 2(ii)(3)–ல் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டமும் இடம் பெற்றுள்ளது.

3. இந்நிலையில், 2023–2024–ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரில் 17.04.2023 அன்று நடைபெற்ற இத்துறையின் மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

**"ஒரு கால் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வகையில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 500 பயனாளிகளுக்கு ரூ.450.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்".**

4. இப்பொருள் தொடர்பாக மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் தனது கடிதத்தில், இரு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் 2011-2012-ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்பட்டு வரும் நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்படி அறிவிப்பிற்கிணங்க, ஒரு கால் பாதிப்படைந்த பயனாளிகளுக்கும் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்க ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

5. மேலும், 2023-2024-ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில், இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்திற்காக ரூ.17.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவதால் ஏற்படும் கூடுதல் தொகை ரூ.4,50,00,000/-ஐ உரிய கணக்குத் தலைப்பின் கீழ் கூடுதலாக ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறும் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அரசினைக் கோரியுள்ளார்.

6. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்று, தற்போது இரு கால்கள் பாதிக்கப்பட்டு, கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தினை விரிவுபடுத்தி கீழே தெரிவிக்கப்பட்டுள்ள பயனாளிகளுக்கான நிபந்தனைகளின் அடிப்படையில், ஒரு கால் பாதிக்கப்பட்டு, கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கும் 2023-2024-ஆம் நிதியாண்டு முதல், இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கிடவும் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்திடும் பொருட்டு முதற்கட்டமாக சுமார் 500 பயனாளிகளுக்கு ரூ.4,50,00,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

<u>பயனாளர்களை தேர்வு செய்வதற்கான நிபந்தனைகள்</u>:

i. போலியோவால் ஒரு கால் பாதிக்கப்பட்டவர்கள்.

ii. விபத்து மற்றும் இதர காரணங்களால் ஒரு கால் 60%-திற்கு மேல் துண்டிக்கப்பட்டவர்கள்.

iii. இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் தவிர ஏனைய இரு சக்கர வாகனங்கள் இயக்க இயலாத நிலையில் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள்.

iv. மேற்குறிப்பிட்ட பாதிப்புகளுடன் கைகள் நல்ல நிலையில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்ட, 65 வயது வரையுள்ள ஒரு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள்.

7. ஒரு கால் பாதிக்கப்பட்டு, கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தும் போது கீழ்க்காணும் நிபந்தனைகளை பின்பற்றுமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்:-

i. மேற்படி ஒரு கால் பாதிக்கப்பட்டு கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர்கள், ஒதுக்கீடு செய்யப்படும் மாவட்டங்களில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமையிலும், எஞ்சிய ஸ்கூட்டர்கள் பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கிட வேண்டும்.

ii. தற்பொழுது மத்திய, மாநில அரசுகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு பயணப்படி வழங்கப்பட்டு வருவதால், இத்திட்டத்தின் கீழ் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் பயணப்படி பெறும் மாற்றுத்திறனாளிகளாக உள்ள இப்பணியாளர்களுக்கு வழங்க தேவையில்லை.

iii. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000ன்படி திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி வழங்கவும், இச்செலவினத்தை மேற்கொள்ளவும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

iv. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் வாங்கி வழங்கப்பட வேண்டும்.

8. மேலே பத்தி 6-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநில செலவினங்கள் – CO – மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் 321. மோட்டர் வண்டிகள் – 01 வாங்குதல்**

**[IFHRMS த.தொ.கு. 2235-02-101-CO-32101]"**

9. மேலே பத்தி 6-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.4,50,00,000/- 2023-2024-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2023-2024-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 6-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2023-2024-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (வ.செ.பொ.I/சந)

துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.24915/நிதி(ச.ந.)/2023, நாள் 03.07.2023 மற்றும் கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.425 (நானூற்று இருபத்தைந்து) (IFHRMS ASL No.2023070425)–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. ஆனந்தகுமார்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (ச.ந/வ.செ.பொது–I&II/வ.வ–I)த் துறை, சென்னை–9.
செயலாளரின் தனிச் செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**
06.07.2023